

அமரர்

# சோமசுந்தரம் தையல்பிள்ளை

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# "நினைவு மலர்"

17.04.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கர மெய்ப்பதம் போற்றுவோம்.

## தேவாரம்

தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்த நாள் வாழ்வதற்கே மனம் வைத்
தியால் ஏழை நெஞ்சே
அந்தணரூர் தொழு துய்யலாம்
மையல் கொண்டஞ்சல் நெஞ்சே.

## திருவாசகம்

கடையவ னேயெனைக் கருணையி
னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின் றோல்
உடைய வனேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந்த தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

சரணகம லாயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தலைமுறை தியானம்வைக்க – அறியாத
சகடசட மூடமட்டி பலவினையிலே சனித்த
தமியன் மிடியால் மயக்கம் – உறுவேனோ
கருணை புரியாதிருப்ப தென்ன குறையிவ் வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற – குமரோனே
கடகழய மிதுரத்ன மணியணி பொன்மாலை செச்சை
கமழுமணமார் கடப்பம் – அணிவோனே
தருணமிதை யாருமித்த கனமதுறு நீள் சவுக்கிய
சகல செல்வ யோகமிக்க – பெருவாழ்வு
தகமை சிவஞானமுத்தி பரகதியு நீ கொடுத்து
உதவிபுரிய வேணும் நெய்த்த – வடிவேலா
அருண தள பாதபத்மம் அனுதினமுமே துதிக்க
அரிய தமிழ் தானளித்த – மயில்வீரா
அதிசயம் அநேகமுற்ற பழனிமலை மீதுதித்த
அழகு திருவேரகத்தின் முருகோனே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்தி உரை

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் - தையற்பிள்ளை அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு மிகவும் துயரடைந் தோம்.

அன்னார் மாவைக்கந்தன் மீது மிகுந்த பக்தி கொண்டவர். அதுமட்டுமல்லாது பக்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாக நடாத்திய பேறும் உடையவர். இதனாலேயே "தெய்வம் தொழாஅல் கொழுநற் தொழுதெழுவாள் மெய்யெனப் பெய்யும் மழை" என்ற வழி மனைமங்கல மாட்சி கண்டவர்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு உற்றார் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறிக்கொண்டு அன்னாரின் ஆத்மா மாவைக்கந்தன் பாதாரவிந்தங்களை சென்றடையப் பிரார்த்திப்போமாக.

"ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி"

இங்ஙனம்
மஹாராஜஸ்ரீ சீ.க்ஷ.இரத்தினசபாபதி குருக்கள்
ஆதீனகர்த்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவனை உருவாக்கிய அன்புத்தாய்

திருமதி சோமசுந்தரம் தையற்பிள்ளை காலமாகிவிட்டார். அவர் வாழ்ந்த காலம் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்கள் அனுபவித்தகாலம். அரசியற் கொந்தளிப்பினால் ஏற்பட்ட கோரப்புயல் அவர் வீட்டிலும் தாண்டவமாடியது. தமது மகன் சேனாதிராசா அடி, உதைபட்டதனையும், சிறைவாசம் அனுபவித்ததையுங் கண்டு அவர் மனம் வேதனைப்பட்டது. தமிழ் மக்கள் மீதும் தமிழ் மண் மீதும் கொண்ட பாசத்தினால் அவர் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு மகத்தானது. அந்த வீரத்தாய்மாரின் வரிசையிலே திருமதி சோமசுந்தரம் தையற் பிள்ளையும் தமது கடமையைச் செவ்வனே செய்துள்ளார். அவருடைய நினைவு நிழலாகும் இந் நேரத்திலே அவர் ஆன்மா சாந்தியடைய வேண்டுமெனவும் அவருடைய இலட்சியக் கனவுகள் என்றோ ஒரு நாள் மெய்ப்பட வேண்டுமெனவும் ஆசிக்கின்றேன்.

ஆதி. வண. கலாநிதி. எஸ். ஜெபநேசன்
தந்தை செல்வா அறங்காவற் குழு
தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කාර්යාලය/அலுவலகம்/Office
විපක්ෂ නායක කාර්යාලය,
03 වැනි මහල, පාර්ලිමේන්තුව,
ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்,
03 ஆவது மாடி, பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.

Office of the Leader of the Opposition,
03rd Floor, Parliament,
Sri Jayewardenepura Kotte.

ආර්.සම්බන්දන්, පා.ම.
இரா. சம்பந்தன், பா.உ.
R. Sampanthan, M.P.
විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கைப் பாராளுமன்றம்
Leader of the Opposition-Parliament of Sri Lanka

දුරකථන/தொலைபேசி/Telephones:
කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2777253, 011-2777256
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2777257, 011-2777285
නිවස / வதிவிடம் / Residence: 011-2559787, 026-2227520
විද්‍යුත් තැපැල් / மின்னஞ்சல் / E mail: sampanthan_r@parliament.lk, samtco@yahoo.com

**தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.மாவை சோ.சேனாதிராசா அவர்களது தாயாரின் மறைவையொட்டி, எதிர்க்கட்சித் தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான கௌரவ இரா.சம்பந்தன் அவர்களால் விடுக்கப்படும்**

**இரங்கல் செய்தி**

தமிழரசுக் கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகமும் தற்போதைய தலைவரும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.மாவை. சோ.சேனாதிராசா அவர்களின் தாயார் திருமதி தையல்பிள்ளை சோமசுந்தரம் அவர்களின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் மிகுந்த வேதனையும் அடைகின்றேன்.

யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்மையார், கலவரங்கள் காரணமாக இடம்பெயர்வு அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்த போதும், தந்தை செல்வநாயகம் அவர்களின் காலந்தொடக்கம் தமிழரசுக் கட்சியின் முக்கிய ஆதரவாளராக விளங்கியதுடன் இவரது மூத்த புதல்வரான திரு.மாவை சேனாதிராசா அவர்கள் எமது கட்சியின் அனைத்துப் போராட்டங்களிலும் பங்குபற்றிய போதெல்லாம் அவருக்குப் பக்கபலமாக விளங்கிய ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்தார். இளந் தாயாக இருந்த வேளையில் தனது கணவரை இழந்த போதும், தன் ஏழு குழந்தைகளையும் நன்கு வளர்த்து, பராமரித்து ஆளாக்கிவிட்ட தியாகியாக நாம் இவரைப் பார்க்கலாம். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த இவர் தனது 96ஆவது வயதில் இன்று அதிகாலை இறைபதம் எய்தியுள்ளார்.

திரு.மாவை சேனாதிராசா அவர்கள் தனது இளவயது முதலே தமிழரசுக் கட்சியின் போராட்டங்கள் அனைத்திலும் பங்குபற்றியதுடன், தமிழ் இளைஞர் பேரவை போன்ற அமைப்புக்களின் முன்னணிப் போராளியாகவும் செயற்பட்டவராவார். அத்தகைய போராட்டங்களின் காரணமாக பல தடவைகள் சிறைவாசமும் அனுபவித்துள்ளார். தனது புதல்வனுக்கு அத்தகைய நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் அவரது அரசியல் போராட்டங்களுக்கெல்லாம் பின்புலமாக நின்று செயற்பட்டவர் திருமதி.தையல்பிள்ளை சோமசுந்தரம் அவர்கள்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் திரு.மாவை சேனாதிராசா உட்பட பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பிலும் எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**இரா.சம்பந்தன், பா.உ.,**
**எதிர்க்கட்சித் தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோமசுந்தரம் – தையற்பிள்ளை
## எம் பெற்றோரின் வாழ்வும் வரலாறும்
## மகனின் சாட்சியங்கள்

என் அன்பான ஆச்சி தங்களிடம் நன்றியும் விசுவாசமுமிக்க மூத்த மகன் பெரியதம்பி எழுபத்திரண்டு ஆண்டுகளுக்கு மேல் இம் மண்ணில் பிறந்து, வளர்ந்து ஐம்பது ஆண்டுகளாய் மக்களின் குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு தமிழர் தேசத்தின் விடுதலைக்கு என்னை அர்ப்பணித்துழைக்க ஊரறிய நாலுபேர் தெரிந்து கொள்ள என்னைப் பெற்றெடுத்தாயே என்ன மாதவம் செய்தனையோ!

இம் மண்ணில் பிறந்து வாழ்ந்து ஒரு நூறாண்டை அண்மித்துவிட்டு எம்மையெல்லாம் பிரிந்துவிட்ட பிரிவுத் துயரும் நன்றியும் எம் உயிரிருக்கும் வரை இருக்கும் ஆச்சி.

பாரம்பரியமாக எம்மூர்களில் தாயை அம்மா என்றும் ஆச்சி என்றும் அழைப்பதுதான் மரபு. யாழ்ப்பாணம் மயிலிட்டி அடியிலிருந்து காசிப்பிள்ளை – எள்ளுப்பிள்ளைக்கு பத்துப் பிள்ளை பெற்ற பத்தினிக்கு நான்காம் வரிசையில் பிறந்து பக்குவமாய் வளர்ந்து மாவிட்டபுரம் புகுந்து சோமசுந்தரம் மனையாளாய் வாழ்ந்து எங்கள் ஏழு மக்களைப் பெற்றெடுத்த மகாராசியாய் நூற்றாண்டு காலம் வாழ்ந்து எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து சென்று விட்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம் ஆதியில் கோவிற்கடவை. வேல்நாட்டி முருகன் வழிபாடியற்றிக் குடிகள் வேளாண்மை வென்று வாழ்ந்துய்த எம்மூர். இந்துமாக் கடலில் பிரளயம் வந்து கடலால் நாம் பிரிவதற்கு முன் தமிழ்நாடு பொதுகையிலிருந்து பொங்கிவந்த தாமிரபரணி மன்னார் திருக்கேதீஸ்வரம் பாலாவி வரை ஆறாய் பெருக்கெடுத்த நாட்டு வளமக்கள் பரம்பரை நாங்கள். இன்று தாமிரபரணி திருநெல்வேலி வரை ஆறாய் வந்து கடலுடன் கலந்து வருகிறது. தமிழ்ச் சங்கத்து முதல் மதுரையோ, கபாடபுரமோ இன்று கடலினுள் சங்கமம். இமயம் உயர்ந்து நிற்கிறது. ஆதி நகுலஈஸ்வரமும் நடு ஆழியில் மூழ்கியிருக்கிறது.

இதனிடையே மாருதப்புரவல்லி மாவிட்டபுரம் தொடர்பான வரலாற்று கதை பற்றி ஆச்சியும் பெண்களும் நாமறியப் பேசுபவை நினைவுக்கு வருகிறது. சோழ நாட்டு இளவரசி முகம் குதிரை வடிவானதால் முனிவர் ஒருவர் அறிவுரைப்படி கோவிற்கடவைக்கு வந்து குளத்தருகே தங்கி, நீராடி குகை வழி சென்று கோவில் கடவை வேல்முருகனை வணங்கி கீரிமலை நகுலம் சென்று நீராடி நகுலமுனிவரை வழிபட்டு வடிவழகு பெற்றிருந்தார். கீரிமலையில் தங்கியிருந்தார் என்றும் ஒரு குறிப்புண்டு. குதிரை முகம் நீங்கிய இடம் என்றுபட்டதால் மாவிட்டபுரம் என்று கோவிற்கடவை மாறியதாய் ஒரு வரலாறுண்டு. இளவரசி தங்கி நீராடிய குளம் குமாரத்தி பள்ளம், குகை எல்லாம் என் ஆச்சி தாயார் எள்ளுப பிள்ளையிருந்த வீட்டுப்பக்கம். எம் மாமன்மார் விவசாயம் செய்யச் சென்ற குளத்து வரம்புப் பாதை எல்லாம் எமக்கு பரிச்சய மானவைதான். சோழ இளவரசி மகிழ்வுற்று தந்தைக்கு செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி இந்தியாவிலிருந்து வள்ளத்திலே காங்கேயனை (முருகன்) வரவழைத்துக் கோவிற்கடவையில் கோவிலமைத்தாராம். அதனால் காங்கேசன்துறை – மாவிட்டபுரம் - கீரிமலை கோவில் திருத்தலங்களாய் விளங்கி வருகின்றன. சிவபூமி என்றும் அழைப்பர்.

அப்பு சோமசுந்தரம் அவர் தந்தை நன்னித்தம்பி வெற்றிலை வேளாண்மையும், நெல்லு வணிகமும் செய்து வந்தவர். அப்பு மலேயா, சிங்கப்பூர் சென்று "வெள்ளி" வெட்டும் தொழிற்துறையில் எழுத்தர், கணக்கராய் இருந்திருக்கிறார். அந்நாளில் எட்டாம் வகுப்பு ஆங்கிலம் படிப்பு. வெளிநாட்டில் வேலை கிடைத்தது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் ஏதோ தப்பி இலங்கை வந்துவிட்டார். அவர் முதல் திருமணத்தில் அவருக்கு ஒரு மகன், இரத்தினசிங்கம். மலையகத்தில் பள்ளி ஆசிரியராய் இருந்து காலமாகிவிட்டார். அவர் தாயார் இளமையில் நோயால் இறந்துவிட்டார். அவர் தனியே வாழ்ந்தார். அன்பான அமைதியான ஒரு மனிதர். அவர் காணி நிலம் காடாய் கிடக்கிறது.

உலகப் போர் முடிந்த தறுவாயில் அப்பு ஆச்சியைத் திருமணம் செய்து கொண்டார். ஏழு பிள்ளைகளைப் பெற்றனர். நான் மூத்தவனாயிருக்கிறேன். ஊரறிய நாலுபேர் சொல்லறிய அப்பு ஆச்சி என்னை ஆளாக்கிவிட்டமைக்காக நன்றியுடன் எழுதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சி ஒரு தீர்க்கமான, திடசங்கற்பமான பெண்மணி. பெற்றோருடன் பத்துப்பிள்ளைகளுடன் வளமாகவும் செல்லமாகவும் வாழ்ந்தவர். அப்புவுடன் வறுமையிலும், துன்பத்திலும் பிள்ளைகளுடனும் துவண்டவர். அவர் பிள்ளைகள் ஊரறிய, பேரறிய வாழ்ந்த பொழுது அவர் போர்காலத்தில் வீடு-வாசல் இல்லாத அகதியாகத் தான் ஊரெல்லாம் உழன்றார். ஒரு வேளை உணவுக்குப் பஞ்சமிலல்லாமலிருக்கலாம். பெரியதம்பி (மாவை சேனாதிராசா) உழைத்துத் தருவான் என்று எதிர்பார்த்திருக்கமாட்டார். பெரியதம்பி பெரும்பாலும் சிறைவாழ்க்கை தான் என்று வீட்டுக்குச் செல்கின்றவர்களிடம் கண்ணீர் விட்டிருக்கின்றார். ஆனால் பெரியதம்பியும் தம்பிமார்களும், தங்கைமாரும் முடிந்தளவுக்கு இறுதிவரை அவரை வாழவைத்திருக்கிறார்கள் என்பதில் ஓர் ஆறுதல். மகிழ்ச்சியாயில்லைத்தான். ஆச்சி வாழ்வில் நூற்றாண்டைக் கண்டாலும் இறுதி ஓராண்டில் தான் வருத்தமாயிருந்தார்.

ஆச்சி யாரையும் வைததில்லை. நல்லதையே நினைப்பார். நல்லதையே செய்வார். எல்லோருடனும் அன்போடு நேசித்து உளமார மனந்திறந்து பேசுவார். என் திருமணம் கூட தலைவர் அமிர், பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில் தமிழ் முறைப்படியே வீட்டில் நடந்தது. விமர்சனங்களும் இருந்தன. ஆச்சி கூட கோவிலுக்குப் போகவில்லையா? என்று கேட்டுவிட்டார். நான் கோவிலில், ஐயரை வைத்துத் திருமணம் செய்யவில்லை என்றுதான் சிலர் சொன்னார்கள். **36**ஆண்டுகள் திருமண வாழ்க்கை மூத்த மகன் கலைஅமுதன் வர்த்தகத்துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுகலைமாணி. இரண்டாமவர் ஆராஅமுதன் பொறியியலாளர். அடுத்தவர் மருத்துவர் தாரகா. என்ன குறை?

நாம் சிறைகளிலிருந்த காலங்களில் தந்தை செல்வநாயகம், அமிர் அண்ணர், மங்கை அக்கா, தருமலிங்கம், வி. என் நவரத்தினம், ஆலாலசுந்தரம் முதலான அரசியல் தலைவர்களும், பேராசிரியர் வித்தியானந்தன் முதலானோரும், சந்தித்து ஆறுதல் கூறி வந்துள்ளனர். ஆச்சியை தம்பி பிரபாவும் ஆச்சி என்று தான் பேசுவார்.

பேராசிரியர் வித்தியானந்தன் முதலானோர் கண்டி போகம்பரைச் சிறைச்சாலைக்கு ஒவ்வொரு வாரமுங் கூட வருவார்கள். ஆச்சியின் கண்ணீரையும் கொண்டுதான் வருவார்கள். மலையகத் தொழிலாளரும் நாமும் ஞாயிற்றுக்கிழமைகளில் முருகன் கோவிலில் சந்திப்போம். இன்றும் ஆயிரமாயிரம் தாய்மார் அவ்வாறு கண்ணீர் விடுவது இன்னும் ஓயவில்லை.

தந்தை செல்வாவை ஆச்சி, "காந்தித் தாத்தா" என்றுதான் சொல்லுவார். போர் முடிந்ததற்குப் பின்னர் சில தடவைகள் தம்பி, "பிரபாகரன் இருக்கிறாரோ? எங்கே இருக்கிறார்" என அப்பாவித்தனமாக வாஞ்சையுடன் என்னிடம் ஆச்சி விசாரிப்பார். அவர் ஒரு அரசியல்வாதியாக இருக்கவில்லை. அரசியலும் பேசவில்லை. ஆனால் குறிப்பாக சிலர் மீது நல்ல அபிமானங் கொண்டிருந்தார். அதில் பிரபாவும் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் சிறைகளில் இந்த காலங்களில் வீட்டுக்குச் சென்று சந்திப்பவர்களிடம் படிப்படியாக அரசியல் பேச ஆரம்பித்தார். சிறிமாவோ பிரதமர் அவர்களை, கோபமாக "சிறிமாவோ எங்கள் பிள்ளைகளைப் பிடித்து வைத்திருக்கிறாள். எங்கடை தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவில்லை" என்றெல்லாம் கண்ணீர் கலங்கப் பேசுவதை செல்பவர்கள் சிறையிலிருந்த எங்களிடம் சொல்லியிருக்கிறார்கள்.

ஆச்சி 96 வயதிலும் பத்திரிகைகளில் அரசியல் செய்திகளை கண்ணாடியில்லாமலே அடையாளங் கண்டு படிப்பார். அரசியல் செய்திகளை நான் விடுதலை பெற்று வந்த காலங்களில் என்னிடம் சொல்வார்.

எம் உறவினர்களில் எனது மனைவி பவானியின் தாத்தா பொன்னம்பலம் மலேசியாவில் 2வது உலகப் போர் காலத்தில் பிரிட்டிஸ் இராணுவத் தளபதியாய் இருந்தவர். அவர் இரண்டாம் தாரமாய் சிங்கப்பூர் வெளியுறவுத்துறை அமைச்சர் இராசரத்தினத்தின் (வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்) சகோதரி "இராசம்" என்பவரைத் திருமணம் செய்தவர். உலகப் போர் முடிந்த பின் இலங்கை வந்தார். அதற்கு முன் பிரிட்டிஸ் போரில் வென்றதற்காகத் திரு. பொன்னம்பலம் பிரிட்டனுக்கு அழைக்கப்பட்டு மகாராணியினால் கௌரவிக்கப்பட்டார். அந்த பட்டயங்களும் பதக்கங்களும் என் மனைவி பத்திரமாக இன்னும் வைத்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா கட்டித்தந்த வீட்டில் என் மனைவி பிள்ளை அமுதனுடன் இருந்த பொழுது 1983ல் மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கிறேன். அந்த வீடுகளும் தற்போது அழிந்து கிடக்கிறது. தாத்தா பொன்னம்பலம் மலேசியாவில் பிரிட்டிஷ் இராணுவத் தளபதியாய் போரிட்டவர், ஆச்சியிடம் வந்து பேசுவார். தம்பி பிரபா தமிழர் விடுதலைக்காக போராடிய தளபதி ஆச்சியிடம் வந்து பேசுவார். இருவரும் இரு துருவங்கள். ஆயினும் இறுதியில் இருவரும் ஒரே இலக்கில் தமிழர் விடுதலை பெறுவதில் ஒரே எண்ணத்தைக் கொண்டிருந்தனர். தாத்தா, தந்தை செல்வாவைத் தெல்லிப்பளையில் சந்தித்துத் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து கொண்டார். தெல்லிப்பளை மாவிட்டபுரம் தமிழரசுக் கிளைத் தலைவராக கடமையாற்றினார். ஆச்சியின் ஆத்மா எத்தனை தலைவர்களுடன், தியாகிகளுடன், தளபதிகளுடன், தொண்டர்களுடன் கலந்து ஆத்மார்த்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன். வந்தோரை வரவேற்று உபசரிப்பதில், தேநீராவது கொடுத்து விடுவதில் அக்கறை கொண்ட பண்பாளர். மரண வீட்டிற்கு வந்தவர்கள் நினைவு கூர்ந்தார்கள்.

அப்புவின் தந்தை வீடு சர்க்கரை, கத்தாழை, சுண்ணாம்பு குழைத்துக் கட்டிய குளிர் வீடு. பெரிய அறை இரண்டு. கூடம் ஒன்று. மற்றது தனியாகச் சமயலறை இன்னொன்று தூரத்தில் கழிவறை. அங்கே கூடத்தில் தான் அப்பாத்தை பனாட்டு, பலகாரம் அத்தோடு பானைக்குள் காசு பணம் வைத்திருப்பார். மூன்று திண்ணைகள், தட்டி வேலி அந்தக்காலத்து வில்லு, வண்டில். அதிலேறி மணியடிப்போம். சுழிபுரத்துக்கு மாடு பூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லுவண்டிலில் கலியாண வீட்டுக்குச் சென்று வந்ததாய் ஆச்சி சொன்னார். வில்லுவண்டில் வேம்பு மரத்தடியில் நிறுத்தப்பட்டு விட்டது. உலாந்தா முருங்கைக்காய் அதற்குள் புகுந்திருக்கும். ஆச்சியின் சமையல் அலாதியானது. 90 வயதுக்குப் பின்னரும் அவர்கையால் சாப்பிட்டிருக்கிறேன். ஆச்சி கிழக்கில் எதிரில் முருகன் கோவில், தெற்கே அம்மன் கோவில், மேற்கே பிள்ளையார், நகுலேஸ்வரம் எல்லாம் சென்று வரும் வழக்கமுடையவர்.

குடும்பங்களில் பிரச்சினைகள் இருப்பது வழக்கம் தான். ஆச்சி சாமர்த்தியமானவர். அப்புவின் சண்டித்தனம் தெரியும். அந்த வேளைகளில் ஆச்சி தன் மூத்த பிள்ளை என்னைத் தூக்கி மடியில் வைத்துக் கொள்வார். அப்புவின் கோபம் அடங்கிவிடும். ஆச்சி அஹிம்சை ,சாமர்த்தியம் அப்புவை வென்றுவிடும்.

நாங்கள் வெற்றிலைத் தோட்டக்காரர், சாமை, குரக்கன், மிளகாய், தக்காளி, கத்தரிக்காய் புகையிலை எல்லாம் பயிரிடுவோம். சுண்ணாகம் சந்தைக்குத்தான் கொண்டு சென்று விற்போம். நல்ல வருமானம் வந்தது. 1958 “மே”த் திங்கள் ஒரு நாள் அதிகாலை அப்பு வெற்றிலைப் பொதிகளைச் சுண்ணாகம் எடுத்துச் செல்ல எம் வீட்டுக்கு முன்னால் உள்ள பேரூந்து தரிப்பிடத்திற்குச் சென்றார். வாகனமொன்று தெரியவில்லை. தாறுமாறாக வந்தவர்கள். அப்பாவை அடித்திருக்கிறார்கள். வீட்டிலிருந்த எங்களுக்கு “ஐயோ,ஐயோ” என்ற சத்தம் கேட்டது. ஆச்சியும் நானும் சத்தத்திற்கு எழும்பி வெளியில் அப்புவைப் பார்க்க வருமுன் அடுத்து வந்த பேரூந்தில் வெற்றிலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதியுடன் அப்பு சுன்னாகம் சென்று விட்டார். ஆச்சி அப்புவுக்கு என்ன நடந்ததோ என அழுதார். மதியத்தின் பின் அப்பு வீட்டுக்கு வந்துவிட்டார். காசும் கொண்டு வந்தார். திண்பண்டங்களும் கொண்டு வந்தார். அப்பொழுது தான் காலையில் ஆமி அடித்த கதையை அப்பு சொன்னார். அப்புவின் "ஐயோ, ஐயோ" என்ற ஈனக்குரல் என் செவிகளில் இப்பொழுதும் கேட்டுக் கொண்டிருக்கிறது. அப்பு ஆச்சியுடன் சண்டித்தனமாய் நடந்தாலும் ஆச்சியின் ஆதங்கத்தை நான் புரிந்து கொண்டேன்.

ஆச்சியும் வெற்றிலை வாழைத் தோட்டத்திற்கு வந்து அப்புவுக்கு உதவி செய்வார். காலையில் ஏழு மணிக்கு நான் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். புதிய வெற்றிலைக்கொழுந்துத் தோட்டம் பிஞ்சுக் கத்தரிக்காய், சிவப்பு குத்து அரிசிச்சோறு சுத்தமான நல்லெண்ணெய் சுடச்சுட ஆச்சியின் கையால் சாப்பிட்ட ருசி இன்னும் நாக்கை விட்டுப் போகவில்லை. சமையல் மணம் மூக்கில் இப்பொழுதும் மணக்கிறது.

எங்கள் வீட்டு ஆழமான கிணறு சூத்திரவாளி ஒரு சோடி மாடு சுற்றிவர நீர் தோட்டத்திற்கு இறைப்போம். கிணற்றடியில் சுற்றிவர தென்னை மரங்கள் ஐந்து ஆறு, தூதுவளை, பிரமி கற்பூரவள்ளி, துளசி, கொடுதலை, ஐந்திலைக் கொடி முதலான மூலிகைகள் எப்போதுமிருக்கும், ஆச்சியே எமக்கு ஏதும் வருத்தமென்றால் மருந்து அரைத்து, உரைத்துத் தருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14,15 அடி பெரிய ஆழமான கிணறு. என் அளவு 5',6' நீர் நிறைந்திருக்கும். இறைத்தாலும் வற்றுவதாயில்லை மழைக் காலத்தில் சிறுவாளி வைத்து கையால் எட்டி அள்ளிக் குளிப்போம். என்ன சுத்தமான தண்ணீர், நன்நீர், இப்போ நச்சுத் தண்ணீர். நாமே நம் சந்ததியைக் கொன்று கொண்டிருக்கிறோம். மிகப் பெரிய கொலைக் குற்றத்திற்கு ஆளாகி வருகிறோம்.

அப்புவிடம் சண்டித்தனம் இருந்தாலும் நாதஸ்வர இசையில் மயக்கமுள்ளவர். இரவிரவாக என்னையும் அழைத்துக் கொண்டு அளவெட்டிக் கும்பிளாவளைப் பிள்ளையார் கோவிலுக்குப் போயிருந்து விடியத் தான் திரும்பி வருவார். இந்தியாவிலிருந்து வித்துவான் இராசரத்தினம்பிள்ளை, காரைக்குறிச்சி அருணாசலம் நாதஸ்வரக் கச்சேரியில். மற்றும் வித்துவான்கள் பத்மநாதன், தட்சணாமூர்த்தி, கோவிந்தசாமி கச்சேரி . மாவிட்டபுரம் இராசா, உருத்திராபதி, ஞானசுந்தரம் காலை ஐந்து மணிக்கு நாதஸ்வரப் பயிற்சி அயலில் எமக்குக் கேட்கும், குயிலோசையும் கேட்கும்.

அப்பு சண்டித்தனம் செய்ததால் அப்பப்பு நன்னியர் சொத்து காணி வழக்குக்குச் செலவழிந்துவிட்டது என்று சொல்லி அப்புவுக்கு முதிசம் கொடுத்ததில் ஓரங்கட்டினார். அப்புவுக்குக் கோபம் ஒருநாளிரவு ஆச்சியையும் எங்களையும் அழைத்துக் கொண்டு ஆச்சியின் தாயார் பங்குக் காணியில் சிறிய ஓலைக்குடிசை கட்டியிருந்தார். முன்னால் இலந்தை மரம், மழை ஒழுகும், பகலில் சூரிய வெளிச்சம் பாய்ச்சப்பட்டுவரும். இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணெய் விளக்கு. ஆனால் அண்ணார்ந்து படுத்தால் அழகான நிலவு பார்க்க ஆசையாயிருக்கும்.

பின் அடுத்த ஆண்டில் ஆச்சியின் அந்த வளவில் மண்வீடு கட்டியிருந்தோம். விளையாட்டுப்பிள்ளைகள் மூத்த தங்கச்சி விளக்குக் கொளுத்தி விளையாடி அந்த வீடும் இரவோடிரவாக எரிந்துவிட்டது. நான் கீரிமலைத் தெருவில் இராசசிங்கம் வீட்டு அறையிலிருந்துதான் பக்கத்தில், குமாரத்திப்பள்ளம், வீமன் காமம் ஆங்கில பாடசாலைக்கும், பின் நடேஸ்வராக் கல்லூரிக்கும் படிக்கவும் விளையாடவும் சென்றுவந்தேன். வறுமை ஏழ்மை கல்வியைப் பாதிக்கவில்லை. ஆச்சி சாப்பிடுகிறாரோ இல்லையோ தோட்ட வருமானத்தில் எங்களுக்கு வேளா வேளைக்கு உணவு கிடைக்கும். விளையாட்டுத் துறையிலும் முன்னணி வகித்திருக் கிறேன்.

பிற்காலத்தில் 1970களில் அப்புவின் மாவிட்டபுரம் காணியில் வீடு. முருகன் கோவிலுக்கு எதிரில் எம்மூர் இளைஞர்களும், மேசன் முத்து, தம்பி தம்புவின் உதவியுடன் ஒரு கல்வீடு கட்டியிருந்தோம். அந்த வீடு தான் தந்தை செல்வா, அமிர் அண்ணர், மங்கை அக்கா, தருமலிங்கம், நவரெத்தினம் ஆலால், தம்பி பிரபா தமிழர் வாழும் இடங்களிலிருந்து இளைஞர் கூட்டம் எங்கள் வீட்டிலேயே தமிழரசுக் கூட்டம். நான் சிறை வாசம் ஐந்தாவது தடவை முடிந்து 1980ல் பவானியைத் திருமணம் செய்ய வாய்ப்பு. நீர்கொழும்பு சிறைச்சாலையில் இருந்தபோது பவானியின் தாயார் செல்வமணி சிங்கப்பூர் உறவினர் சரவணமுத்து மாமா, பவானி எல்லாம் வந்து பார்த்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் திருமணம். 1970ல் அப்பு யாழ்.போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு காலில் ஏர்ப்பு வலி நோய். ஒரு வாரத்தில் இறந்துவிட்டார். அப்பொழுது பொலிசார் என்னைக் கைது செய்ய தேடிய காலம். பா.உ வி.என். நவரெத்தினம் என்னைப் பாதுகாத்துவிட்டார். அப்புவின் ஈமக்கடன் செய்து முடித்துவிட்டேன். அதற்குப் பின்னரும் ஆச்சி எங்களை வழிநடத்தி வந்திருக்கிறார். அந்த மாபெரும் அர்ப்பணத்தை என்றும் மறவோம்.

1979ல் யாழ்ப்பாணத்தில் மட்டக்களப்பு காசியானந் தனுக்குத் திருமணம். எங்கள் வீட்டில்தான் மாப்பிள்ளை. 1980ல் யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராசாவுக்கு திருமணம். அதன் பின்னும் நான் 1983 பிற்பகுதியில் கைது செய்யப்பட்டேன். அப்போது ஒரு மகன் கலையமுதன் ஒரு வயதிருக்கும். 1983ல் விடுதலை பெற்ற பின் இராமானுஜம் கப்பலில் இந்தியாவுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. 1991ல் ஆச்சியும் இந்தியா வந்தவிட்டார். அப்பொழுது நான் பாராளுமன்ற உறுப்பினர். ஆச்சியை தென்னிந்திய திருத்தலங்களுக்குக் கூட்டிச் சென்றோம். ஆச்சி பெரும் ஆறுதலடைந்தார். அடுத்த ஆண்டு ஆச்சி மாவிட்டபுரம் திரும்பி விட்டார்.

நாமும் திரும்பிய காலத்தில் பவானியின் தாத்தா மலாயாவிலிருந்து ஓய்வுபெற்ற பிரிட்டிஸ் இராணுவத்தளபதி எமக்குக் கட்டித்தந்த வீடு. அந்த வளவில் பழைய வீடுமிருந்தது அம்மன் கோவில் முன்பக்கம், பின்பக்கம் வைரவர் கோவில், அமெரிக்கன் மிசன் பள்ளிக்கூடம் எனது ஆரம்பக்கல்வி. அருமைநாயகம் தந்தை செல்வா உறவினர் தலைமையாசிரியரை மறக்கமுடியவில்லை. ஆமிக்கே திருப்பி அடித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்புறம் நல்ல கருக்கு வடலி, பனை மரங்கள் வீட்டைச் சுற்றி மாமரங்கள் பெரிய வளவு. அங்கேயும் தந்தை செல்வா முதல் தமிழரசுத் தலைவர்கள் வருவார்கள். பிற்காலத்தில் 1977 ஏப்பிரல் தந்தை செல்வாவை இழந்து விட்டோம். இந்தச் சூழலில் தமக்குப் பாதுகாப்பானதென நம்பி போராளித் தலைவர்கள் வந்து சென்றனர். பவானியின் தாயார் நல்ல உணவு சமைத்துக் கொடுப்பார்.

அந்த வீட்டில் இரவு வேளைகளில் அமிர் அண்ணன், காசியானந்தன், நான் (மாவை சேனாதிராசா), தம்பி பிரபா, உமா மகேஸ்வரன் ஆகியோர் சந்திப்போம். போராட்டங்கள் தீவிரமடைந்த காலம். 1972 அரசியலமைப்புக்கு எதிரான போராட்டங்கள் அஹிம்சை வழியிலும், ஆயுத வழியிலும் தீவிரமடைந்தன. 1961லேயே தந்தை செல்வா தலைமையில் சத்தியாக்கிரகப் போராட்டம். நாமெல்லாம் மாணவர்கள் தொடர்ச்சியாக அப்போராட்டங்களில் வடக்குக் கிழக்கெல்லாம் சென்று பங்கு கொண்டோம்.

மாதக்கணக்கில் சிறிமாவோ அரசு வடக்கு கிழக்கிலில்லை. நாம் மாணவர் இளைஞர் போராட்டங்களை முன்னெடுத்து வந்தோம். பத்து ஆண்டுகாலத்தில் பலதடவைகள் சிறைவாசம் சித்திரவதைகள். சிறையில் ஆணையிறவு இராணுவ முகாமில் செத்துவிட்டோம் எனத்தூக்கி வீசப்பட்டு உயிர்பிழைத்து வந்த காலங்கள்.

நான் 1975 இல் போகம்பரைச் சிறையில் இருந்தபோது ஆச்சி வந்து சந்திக்க விரும்பினார். தம்பி தங்கராசா வந்து சந்திப்பார். சந்தித்த போது என்னிடம் கேட்டார். ஆச்சி சிறைச்சாலைக்கு வருவதை நான் விரும்பவில்லை. தம்பி தங்கராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ விடுதலைப் போராட்டங்களில் ஆர்வமுள்ளவர். பல நெருக்கடிகளைச் சந்தித்தார். அதனால் ஜேர்மனி சென்றுவிட்டார். ஆச்சியுடன் தொலைபேசியில் அடிக்கடி பேசிக்கொள்வார். ஆச்சியின் இழப்புச் செய்தி கேட்டு இலங்கைக்கு வந்தார். பா.உ. சுமந்திரன் கொழும்பு வருவதற்கு உதவியாயிருந்தார். தங்கராசா ஆச்சியின் நாலாவது மகன் ஈமக்கடன் கிரியைகளில் ஈடுபட்டார்ஆறுதலாக இருந்திருக்கும். மூன்றாவது மகன் தம்பி இராசரத்தினம் இதயநோய் காரணமாய் இளமையில் 1985ல் காலமாகிவிட்டார்.அப்பொழு நான் இந்தியாவிலிருந்தேன்.அவர் மரண நிகழ்வில் கலந்து கொள்ள வாய்ப்பிருக்கவில்லை.

பெரிய தம்பியை இராணுவம், பொலிஸ் பிடித்துச் சென்று விடுதலை செய்யவில்லை. 42 இளைஞர்கள் சிறைகளில் உண்ணாவிரதமிருந்தகாலம். 1976 ஆகஸ்ட் உலக நாடுகள் சிறிமாவோ தலைமையில் அணி சேரா உச்சி மாநாடு. உலகுக்கு தமிழர் உரிமைப் போராட்டங்களை வெளிக் கொண்டு வர சிறைகளில் நாம் உண்ணாவிரதப் போராட்டம். தமிழர் பிரதேசமெங்கும் கொழும்பிலும் போராட்டங்கள். தந்தை செல்வாவின் நேரடியான தலையீட்டில் அப்போராட்டங்கள் ஓய்ந்தன. ஏனென்றால் 1976 ஆகஸ்ட் ஒருவாரத்தில் அணிசேரா மாநாடும் முடிந்திருந்தது.

அக்காலகட்டத்தில் தான் ஆச்சி வீட்டில் உண்ணாவிரத மிருந்தார். கண்ணீர் விட்டழுது வந்தார். எங்களை சிறையிலிருந்து விடுதலை செய்யுமாறு குரலெழுப்பினார். சிறிமா எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை விடுதலை செய்யென்று தன்னைப் பார்க்க வந்த தலைவர்களிடம் வெளிநாட்டவரிடம் உரக்கச் சொன்னார்.

ஆச்சிக்கு அரசியலில்லை. இளம் பிள்ளைகளைத் தன் மகன் பெரிய தம்பியை விடுதலை செய்யவில்லை என்று சிறிமாவோ அரசாங்கத்தை திட்டித் தீர்த்தார். கண்ணீர் விட்டழுதார். தமிழர் போராட்டத்தை நியாயம் என்றார். இப்படித்தான் ஆச்சியின் அரசியல் வெளிப்பட்டிருந்தது. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு முன்னால் பெரிய சத்தியாக்கிரகப் போராட்டமே நடந்தது. நான் அப்பொழுதும் சிறையில் தானிருந்தேன். தமிழர் முத்திரை வெளியிடப்பட்டது.

*1983* களுக்குப்பின் *2009* வரை மிகப்பெரிய தமிழர் விடுதலைப் போாரட்டம் ஆயுதப் போராக மாறிய காலங்கள். மாவிட்டபுரம் வீடுகள் எல்லாம் குண்டுவீச்சுக்களால் அழிந்து போனது, தமிழர் தேசமெல்லாம் அழிந்துபோனது. தமிழர் தேசமெல்லாம் பேரழிவைச் சந்தித்தது. ஆச்சியும் அகதியாகப் போனார். இலட்சக்கணக்கான தமிழர் அழிந்தும், அகதிகளாகவும் ஆனார்கள். தொடர்ந்தும் தம் தேச விடுதலைக்காகப் போராடுவதை நூறாண்டுகள் வாழ்வின் அண்மித்த பொழுதும் ஆச்சி இலங்கை அரசை எண்ணத்தால் பேச்சினால் எதிர்த்து வந்தவர்தான். தந்தை செல்வாவின் அஹிம்சைப் போராட்டம் முதல் தம்பி பிரபாவின் ஆயுதப்போரட்டம் வரை ஆச்சியும் இதயத்தால் பங்களிப்புச் செய்தார். கண்களால் பார்த்தார். குடியிருக்க நிலமில்லாமல் தனக்கென தன் குடும்பத்திற்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடில்லாமல் தன் மூன்றாவது மகள் ரஞ்சி திருமணம் செய்த வீட்டில் இறுதி வரை தஞ்சமடைந்து உயிருடன் இருந்தவர். 18.03.2016 நள்ளிரவின் பின் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து விட்டார். நான் 12/03/2016 அப்பொழுது மருத்துவ பரிசோதனைக்காக இந்தியா சென்றிருந்தேன். 18/03 இரவு ஆச்சியின் உடலைப் பார்த்தேன். மனம் நொந்து போனது. இன்னும் மாறவில்லை.

தமிழர் பாரம்பரியத்தில் சிந்துவெளி நாகரிகம், ஹரப்பாவிலிருந்து உயிர் நீத்த தமிழ் உடலங்களை மண்தாழிகளில் இட்டு தமிழர் பூமியில் புதைத்து விடுவது தான் பெருவழக்கிலிருந்தது. ஆனால் நாம் எரித்துச் சாம்பலாக்கி வரலாற்றை வாழ்வில் மானிடத் தேடலில் தமிழர் எலும்புக்கூடுகள் சாம்பலாக்குவதால் சுவடுகளை அழித்து வருகிறோம் எனும் ஆதங்கம் ஆழமாக இதயத்தில் பதிந்து வருவதற்கு விடைகாண வேண்டும்.

வரலாற்றுப் பேராசிரியர் கலாநிதி பத்மநதான், பேராசிரியர் புஸ்பரத்தினம் உடன் வேலணை சாட்டி தமிழர் நாகரிகத்தைப் பறைசாற்றும் நினைவிடங்களை சென்று பார்க்கச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. 10அடி ஆழத்தில் நீர் மட்டத்தில் தாழிகளில் தாம் வணங்கும் தெய்வச் சின்னங்களுடன் தமிழர் உடலங்கள் புதைக்கப்பட்ட வரலாற்றை பார்க்கவும், படிக்கவும் கிடைத்த சந்தர்ப்பம் பெருத்த ஆறுதலை தந்தது. தமிழர் நாகரிகத்தில் வரலாற்றுச் சின்னங்கள், சுவடுகள் பேணப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும். எனக்கு அதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்குமென்று நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சியின் உடலை 23.03.2016 நண்பகல் சுட்டெரிக்கும் வெயிலில் சண்டிலிப்பாய் வீட்டிலிருந்து மாவிட்டபுரம் இடுகாட்டுக்கு எடுத்துச் சென்றோம். சுடலையும் எங்களுக்கு உருத்தானது தான் என்பதால், கீரிமலை கடலில் நீர் நிலையில் ஈமக்கடன் நிறைவேற்றுவது எமது ஆன்ம உரிமை அதற்காகத்தான் மாவிட்டபுரம் ஆச்சியின் உடல் எடுத்துச் செல்லப்பட்டு எரியூட்டப்பட்டது.15.04.2016 நிகழ்காலத்தில் கிரியை நியதிகளுக்கு இணங்கி கீரிமலையில் சைவக்குருமார் கடமைகளும், சண்டிலிப்பாயில் தானமும் வழங்கி நிறைவேற்றப்படுகின்றது.17.04.2016 கீரிமலை புண்ணிய பூமியில் சிவபூமியில் ஆச்சியின் ஆண்ம ஈடேற்றத்திற்காகவும் ஈமக் கடனை நிறைவு செய்யவும் பிரார்த்தனையில் ஈடுபடுகிறோம். ஆச்சி எம் இதயங்களில் என்றும் இறவாப் புகழுடன் வீற்றிருப்பார்.

மாவை சேனாதிராசா

மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு வேதனையில் துடிக்கிறேன் என் அன்பு அம்மாவே!

ஏழு பேர் ஒன்றாய் உன் வயிற்றில் உதித்தோம்
தொட்டுத் தூக்கி எமை உன் தோள் மீது சாய்த்து
பட்டு மேனி பழுது படாது அல்லும் பகலும் அரவணைத்து
மட்டில்லா மகிழ்வோடு எமை வளர்த்த அன்னையே!

குட்டிப் பிள்ளைகளாய் நாமிருந்த வேளையிலும்
சுட்டித் தனங்கள் செய்து நின்ற வேளைகளிலும்
திட்டி எமை தீர்த்த நாள் நாம் அறியோம்!
தொட்டு எமை நீ என்றும் கட்டியணைப்பாயே!

தொண்ணூற்று நான்கு வயது வரை வாழ்ந்து போன தாயே
எண்ணங்கள் அனைத்தும் நிறைத்திட்ட அன்னையே
திண்ணமாய் எமக்கு இனி மறுபிறப்பு உண்டாகில்
அன்றும் இன்று போல் தாய் மகவாய் பிறப்போமே!

என்றும் மாவைக் கந்தன் திருவடியே கதியென்றாய்
நன்று உலகில் நாம் வாழ அவனே துணையென்பீர்
ஈன்றெடுத்து எமை ஆளாக்கி விட்ட அன்னைய
மாவைக் கந்தனின் தாழில் பெறுக நீர் சாந்தி.

மகள்

திருமதி. சிவகுமார் செல்வமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கு சென்றீர்கள் எம்மைவிட்டு?
### (பேரப்பிள்ளைகள் புலம்பல்)

தத்தி நடைபயின்ற காலம் முதல் எங்கள்
பிஞ்சு விரல் பிடித்து முத்தமிடும் அம்மம்மாவே
அழுது அடம்பிடிக்கும் எங்கள் அழுகைகளை
நிலாக்காட்டி சோறூட்டி தணித்திட்ட அம்மம்மாவே
பாட்டி வடை சுட்ட கதை மிக அழகாய் சொல்லி எங்கள்
படிக்கும் ஆர்வத்தை மெருகேற்றி விட்டவரே
இன்று நாம் உயர்ந்து நிற்க அன்று நீர் பட்ட கஷ்டம்
வார்த்தையால் இலகுவாய் சொல்லி விட முடியாது.
உறவுகளின் உறைவிடமே அருமைமிகு அம்மம்மாவே
அம்மம்மாக்கு இலக்கணமாய் தரணியில் வந்தவரே
கண்ணியமாக நாம் வாழ கல்வி தான் வேண்டுமென்று
கண்ணாக எமைப் போற்றி புத்திமதிகள் பல கூறி
அன்புதனை எம்மீது தேனாக சொரிந்தீர்கள்
நாம் அம்மம்மா, அம்மம்மா என்று ஆசையுடன் அழைந்து நின்றோம்
இன்று எமைக் கலங்க வைத்து எங்கு சென்றீர்கள் அம்மம்மா
மீண்டும் ஒரு பிறப்புண்டேல் எமக்கு உறவாகவே - வந்திடுங்கள்.

அம்மம்மா!
திருமாவளவன்
கமலமோகன்
அமுதினி
மயூரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அன்னையே இனி எங்கு காண்போம்

பத்து மாதம் எமை சுமந்து பெற்றெடுத்து
பாலூட்டி சீராட்டி ஆளாக்கிப் பேரின்பந் தந்தீரே
சிறுவயதில் எம் தந்தை எமை பிரிந்தாலும்
கண்ணை இமைக் காப்பது போல் எமைக் காத்தீரே
கோழிக் குஞ்சுகளை காப்பது போல் எமை
உங்கள் அரவணைப்பில் காத்து வளர்த்தீரே
கற்றொழுகி நிற்பதற்கும் காசினியில் நல்லவராய்
தமிழ் பற்றுடன் அற்புதமாய் வாழ்வதற்கும் அனுதினமும்
எமக்கு நற்கதியாய் நின்றவரே. தாயே
நாம் காணும் இன்பதுன்பங்களில் கலந்து நின்றீரே
புன்னகையின் மறுவடிவமே கற்பகமே
காணாத வடிவெடுத்த உன் பெருமை
சொற்களில் அடங்குமோ? புல இன்னல்கள் சகித்தீரே
சிகரமே சொல்லாமல் நிற்காமல் எம்மை விட்டு
நெடும் தூரம் தான் சென்றீரோ?
உங்களைக் காணாமல் துடிக்கின்றோம்.
உங்கள் பிரிவால் கண்ணீரில் கரைகின்றோம்.
ஆறுதலின்றி தவிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய அமைதி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் - எம் அன்பு அன்னையே

பிள்ளைகள் : செல்வராணி யோகீஸ்வரன்
இராஜேஸ்வரி ஜெயரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மம்மா

அன்பால் பிள்ளைகளாய் நாம் உயர
அவனியிலே வழிகாட்டி நின்ற அம்மம்மா
தன்றே பெயரழைத்து பேரன் பேர்த்தி
நலன்களிலே மூச்சிதுவே நின்ற அம்மம்மா
என்றும் நாம் வழ்வில் ஏற்றம் காண
ஏணியதாய் பலம் சேர்த்து நின்ற அம்மம்மா
இன்று உங்கள் பிரிவு எம்மை வாட்டி நிற்க
இங்கே நாம் யாவருமே கதறுகின்றோம் அம்மம்மா
கலங்கிய விழிகளில் நீர் வடிய – எமை விட்டுப் பிரிந்தீர்களே

-பேரப் பிள்ளைகள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல மனிதர்கள் எதற்காக இறக்க வேண்டும்.

உங்கள் மனதிலும் இரக்கமில்லை! எம் போன்றவர்களிலும் இரக்கமில்லை, நல்லவர்கள் மனதிலும் இரக்கமில்லை.

இப்படி நல்ல மக்களின் இதயத்தில் ஒரு உன்னத உயிர் இறக்கவில்லை என்கின்ற எண்ணம் இறுக்கமாக இருக்கும் போது அந்த உயிர் எப்படி மறையும்.?

"அந்த உயிர் திரும்ப ஈழ மண்ணில் எழுந்து வரும், கிழர்ந்து வரும், சிலுத்து வரும்"

ஒரு நல்ல ஆத்மா சாகக்கூடாது என்ற பல்லாயிரக்கணக்கான ஆத்மாக்கள் வேண்டி நிற்கும்போது நிச்சயமாக அவாவுக்கு மரணமில்லை;

எம் தாய் ஈழ மண்ணில் 100 ஆண்டுகள் அண்மித்து வாழ்ந்து மரணித்த போதும் மீண்டும் ஒரு முறை வருவார், எல்லோர் கண்முன் தோன்றுவார்.

இறைவன் இருக்கிறார் என்பதில் எனக்கு நம்பிக்கை ஏதும் இல்லை. ஆனால் அதே சமயம் நல்ல மனிதர்களின் இதயத்தின் அடியில் இருந்து புறப்படும் நல்ல எண்ணங்களுக்கு ஒரு சக்தி உண்டு, அந்த சக்தியைத்தான் இறை சக்தி என்பேன்.

"எம் எல்லோர் கவலை என்பது தற்காலிகம் தான், ஆனால் விடிவு என்பது தான் நிரந்தரம்"

நல்ல மக்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றனர், ஆனால் நல்ல மனங்கள் ஒன்று சேரவில்லை என்பது தான் உண்மை.

எமக்கு நல்ல தாயாக இருந்து நூறு ஆண்டுகள் வாழ்ந்து நல்ல ஒழுக்கத்தை கற்பித்து விட்டு மரணித்து 31 நாட்கள் சென்று விட்டாலும் அவாவின் ஆத்மா சாந்திக்காக இறைவனிடம் வேண்டி நிற்பேன்.

வணக்கம்

இப்படிக்கு மகன்
சோ.தங்கராசா
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரை-01

# தமிழர் பண்பாட்டு மரபில் இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்

பேராசிரியர் *ப.புஷ்பரட்ணம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

உலகில் இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கும் மரபு மிகத் தொன்மையானது. இம்மரபு தமிழகத்திலும், ஈழத்திலும் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியதற்கு நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன.



தென்தமிழகத்திலும், இலங்கையிலும் முதன்முதலாகநிரந்தர குடியிருப்புக்களையும், நீர்ப்பாசன விவசாயத்தையும் அறிமுகப்படுத்தி தமிழர் நாகரீக உருவாக்கத்திற்கு காரணமாக இருந்ததிராவிட மக்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்புண்டு என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு பல வடிவங்களில், பல அளவுகளில் பெரியகற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களையும், நினைவுச் சின்னங்களையும் அமைத்து அவற்றை வழிபட்டு வந்தனர். இவற்றை அமைப்பதற்கு பெரிய கற்களைப் பயன்படுத்தியதால் இவை சங்ககாலத்திற்கு முந்திய பெருங்கற்காலப் பண்பாடு என அழைக்கப்படுகிறது. அவ்வாறு அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்களில் இறந்தவர்களின் உடலோடு அவர்கள் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்தி வந்த பொருளாதாரஉற்பத்திச் சாதனங்கள்,அன்றாடப் பாவனைப் பொருட்கள்,பலதரப்பட்ட உணவுவகைகள், தானியங்கள், மங்கலப் பொருட்கள், கலைப் பொருட்கள், சமயச் சின்னங்கள் முதலானவற்றை இறந்தவருக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையற் பொருட்களாக சிறிய மட்பாண்டங்களில் வைத்து இறந்தவர்களின் உடலைச்சுற்றி அடக்கம் செய்தனர்.

இச்சடங்கு முறைபற்றிப் பிற்காலத்தில் எழுந்த சங்க இலக்கியத்தில் பல குறிப்புகள் காணப்படுகின்றன. இம்மரபு இன்றுவரை இலங்கைத் தமிழரின் ஈமக்கிரியைகளில் சில மாற்றங்களுடன் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.சிலஇடங்களில் அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்களில் இறந்தவர்களை நினைவுபடுத்தி நாட்டியநெடிய கற்களும் காணப்படுகின்றன. இவையே சங்க காலத்திலும், பிற்காலத்திலும் நடுகல் என அழைக்கப்படுகின்றது.

இருப்பிடங்களை அழியும் பொருட்களால் அமைத்த இப்பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களுக்கு அழியாத கற்களையும், பெரிய தாழிகளையும் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை அமைத்ததன் மூலம் அம்மக்களிடையே மறுபிறப்பு பற்றிய நம்பிக்கையும், ஆன்றோர் வழிபாட்டு மரபும் தோன்றியிருந்தமை தெரியவந்துள்ளது. இவ்வீமச்சின்னங்களுக்கு அருகிலேயே இப்பண்பாட்டு மக்களது குடியிருப்பு,குளம், வயற்பரப்பு என்பனவும் காணப்பட்டன. அவற்றுள் பெருங்கற்கால ஈமச் சின்னத்திற்கும் அருகிலிருந்த குளத்திற்கும் இடையிலான தொடர்பின் முக்கியத்துவத்தை ஆராய்ந்த அறிஞர்கள் இதுஇந்து மதத்தில் ஆலயத்திற்கும் தீர்த்தக்கேணிக்கும் இடையிலான தொடர்பிற்கு முன்னோடியாக அமைந்திருந்ததெனக் கூறுகின்றனர்.

பெருங்கற்காலப் பண்பாடு என்பது திராவிட மொழி பேசும் தென்னிந்திய மாநிலங்களுக்குரிய பொதுப்பண்பாடாகும். ஆயினும் தமிழகத்திலும், இலங்கையிலும் இப்பண்பாட்டில் சில தனித்துவமான பண்புகளும், பொதுத்தன்மைகளும் காணப்படுகின்றன. இப்பண்பாட்டின் முதிர்ச்சி நிலையிலேயே சங்ககாலப் பண்பாடு தோன்றியதெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் அறிஞர்கள் திராவிட மொழிகளில் முதலில் தமிழில் வளமான சங்க இலக்கியம் தோன்றுவதற்கு இப்பெருங்கற்காலப் பண்பாடே காரணம் எனக் கூறுகின்றனர். சங்க இலக்கியத்தில் தமிழகத்தில் இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நடுகல், பதுக்கை, கல்வட்டம், தாழி முதலான ஈமச்சின்னங்கள், நினைவுச் சின்னங்கள் பற்றியும், அவற்றிற்குச் செய்யப்பட்ட கிரியை முறைகள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. இதைப் பின்வரும் பாடலும் உணர்த்துகின்றது.

பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியடு,
அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து
இனிநட்டனரே! கல்லும், கன்றொடு
கறவை தந்து பகைவர் ஓட்டிய
நெடுந்தகை கழிந்தமை அறியாது
இன்றும் வருங்கொல், பாணரது கடும்பே?
(உறையூர் இளம்பொன் வாணிகனார் 264)



இவ்வாதாரங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்கள் சங்ககாலத்திலும், பிற்காலத்தில் சில மாற்றங்களுடனும் தொடர்ந்ததை உறுதிப்படுத்து கின்றன. பெருங்கால இமச்சின்னத்தில் நாட்டப்பட்ட நெடிய நினைவுக்கல் சங்க காலத்தில் நடுகல் என அழைக்கப்படுகிறது. சங்க இலக்கியத்தில் நடுகல் என்பது புறமுதுகு காட்டாது போரில் இறந்தவர் களையும், அரசர்களையும் நினைவுபடுத்தி நாட்டப்பட்ட நினைவுக் கற்கள் எனக் குறிப்பிடப் படுகிறது. அந்நடுகல்லில் அவர்கள் செய்த சாதனைகளும், பெருமைகளும் எழுதப்பட்டு, அந்நடுகல்லுக்கு நெய்விளக்கேற்றி அதை மக்கள் வழிபட்டு வந்தனர். நடுகல் பற்றிக் கூறும் புறநானூறு சிறந்த வீரனுக்கு நடுகல் நாட்டி, அவன் பெருமைகளைக் கல்லிலே பொறித்து, அக்கல்லை மக்கள் வழிபட்டதாகக் கூறுகிறது. இந்நடுகற்களை மரநிழலின் கீழ் அமைத்து அவற்றைத் தெய்வமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றியதாக மலைபடுகடாம் கூறுகிறது.இந்நடுகற்கள் பற்றி ஆராய்ந்த முன்னோடி அறிஞர்கள் போரில் இறந்தவர்களுக்கே நடுகற்கள் எழுப்பப்பட்டதாகக் கூறி அவற்றிற்கு வீரக்கல் எனவும் பெயரிட்டுள்ளனர். ஆனால் தமிழகத்தில் அண்மைக்காலத்தில்



மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த தலைவர்களுக்கும், மக்களுக்கு பணிசெய்த தியாகிகளுக்கும் நடுகற்கள் நாட்டப்பட்டதற்கு ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவ்வகையான நடுகற்களுக்குத் தொல்லியலாளர் நினைவுக்கல் எனப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டில் பெரிய கற்கள் காணப்படாத மணற்பாங்கான இடங்களில் பெரிய தாழிகளைச் செய்து அதற்குள் இறந்தவர் உடலையும், படையற் பொருட்களையும் இட்டு அடக்கம் செய்யும் முறை காணப்பட்டது. இம்மரபே சங்க காலத்திலும், சற்றுப் பிற்பட்ட காலத்திலும் செல்வாக்குப் பெற்ற நினைவுச் சின்னங்களாக இருந்தன.


சங்ககால மன்னர்களிற் சிலர் தாம் இறந்ததும் தம்மை அடக்கம் செய்வதற்கான தாழிகளை முன்கூட்டியே செய்து வைத்திருந்ததற்கு இலக்கியங்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன. நற்றிணையில் இறந்தவர்களை அடக்கம் செய்யப் பயன்படுத்தப்பட்ட பெரிய தாழிகள் கறுப்பு நிறத்தில் இருந்ததாகவும், அவை கவித்து புதைக்கப்பட்டதாகவும் கூறுப்படுகிறது. மணிமேகலையில் வரும் "சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுவோர் தாழ்வறையிலடைப்போர் தாழியில் கவிப்போர்"என்ற வரிகள் இறந்தவர்களைச் சுடுவதும், திறந்தவெளியில் கிடத்துவதும், குழிதோண்டி இடுவதையும், நிலத்திற்குக் கீழே தாழ்ந்த இடங்களில் அடைத்தும், தாழியில் வைத்து மூடுவதையும் குறிப்பிடுவதாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய ஈமச்சின்னங்கள், நினைவுச் சின்னங்கள் பல ஏறத்தாழ சமகாலத்தில் இலங்கையிலும், இலங்கைத் தமிழரிடம் தோன்றியதற்கு நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவை பற்றி விரிவாக ஆய்வு செய்த அமெரிக்கப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் விமலாபேக்லே, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் சுதர்சன் செனிவரட்னா போன்ற அறிஞர்கள் தமிழகத்தோடு இலங்கை கொண்டுள்ள நெருங்கிய ஒற்றுமைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.





பண்டைய தமிழரின் நினைவுச் சின்னங்களுள் தாழி அடக்க முறை முக்கிய அம்சமாகக் காணப்பட்டது. இலங்கையில் புத்தள மாவட்டத்தில் பொம் பரிப்பு என்ற இடத்தில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் 800க்கு மேற்பட்ட தாழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்தாழிகளில் இறந்தவரின் உடல் முழுமையாகவும், பகுதியாகவும் தாழியில் போடப்பட்டு அடக்கம் செய்யப்பட்டு இருந்துள்ளன. சில தாழிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மனித உடல்கள் ஒன்றாக அடக்கம் செய்யப்பட்டுள்ளன. அவை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் எலும்புகள் ஒன்றாகச் சேர்த்து வைக்கப்பட்டு பின்னர் தாழியில் போட்டு அடக்கம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சில இடங்களில் அடக்கம் செய்யப்பட்ட தாழிகளில், மட்பாண்டங்களில் காணப்படும் இருதலை, முத்தலைச் சூலங்களும், அவற்றோடு கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண்ணால் செய்யப்பட்ட இலிங்க வடிவங்கள், ஆண்பெண் உருவங்கள் இலங்கையில் தோன்றிய சிவன், சக்தி வழிபாட்டின் தொடக்கச் சின்னங்களாகக் கருதப்படுகின்றனன. சில இடங்களில் தாழியில் அடக்கம் செய்யப்பட்ட ஈமச்சின்னங்களைச் சுற்றிக் கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காணப்படுகின்றன. இவ்வாறான தாழியடக்கமுறை வடஇலங்கையில் குஞ்சுப்பரந்தன், பூநகரி, சாட்டி, ஆனைக்கோட்டை, வல்லிபுரம் போன்ற இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கல்வட்டம் என்பது பண்டைய காலத்தில் தமிழர்கள் இறந்தவர் நினைவாக அமைக்கப்பட்ட முக்கியநினைவுச் சின்னங்களில் ஒன்றாகும். இது நான்கு கற்களைப் பலகை போல் செதுக்கி அவற்றைப் பெட்டிவடிவில் பொருத்தி அதற்குமேல் கற்பலகை கொண்டு மூடுவதைக் குறிப்பதாகும். அவ்வாறு வடிவமைக்கப்பட்ட கற்பெட்டிக்குள் இறந்தவரின் உடலை அல்லது எலும்புகளை அல்லது எரித்த சாம்பலை தாழியில் இட்டு சுற்றிவர நிவேதனப்பொருட்களை சிறிய சட்டிகளில் வைத்து அடக்கம் செய்யப்படும். இவ்வீமச் சின்னங்களைச் சுற்றி சில இடங்களில் வட்டமாக வெளியே தெரியும் வகையில் கற்கள் நாட்டப்பட்டிருக்கும்.

சில இடங்களில் ஈமச்சின்னத்திற்குமேல் பெரிய தட்டையான கற்பலகைஅல்லது குடைவடிவில் அல்லது தொப்பி வடிவில் செய்யப்பட்ட கல் உருவங்கள் வைக்கப்பட்டு அவற்றைத் தாங்கி நிற்பதற்கு கற்கள் நாட்டப்பட்டிருக்கும். இவ்வகை ஈமச்சின்னங்கள் இலங்கையில் வவுனியாவில் மாமடு,ஈபின்கடுவா, மட்டக்களப்பில் கதிரவெளி,யாழ்ப்பாணத்தில் சாட்டி போன்ற இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.ஈபின்கடுவா கல்வட்ட ஈமச்சின்னத்தில் இறந்தவருக்கு நிவேதனப் பொருளாக தங்கக் கட்டிகள் இடப்பட்டிருந்ததுடன், இறந்தவரைப்பற்றிய குறிப்புகள் மூடிவைக்கப்பட்ட கற்பலகையில் குறியீடாகவும் எழுதப்பட்டுள்ளது. இது குறுநிலத் தலைவன் அல்லது சிற்றரசனின் நினைவாக அமைக்கப்பட்ட சின்னமாக இருக்கலாம் எனக் கருதப்பட்டுகிறது.




அண்மையில் செட்டிக்குளத்தில் கப்பாச்சி என்ற இடத்தில் இதுபோன்ற ஒரு ஈமச்சின்னம் அடையாளம் காணப் பட்டள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை வரலாற்றில் 44 ஆண்டுகள் நீதி தவறாது நீண்டகாலம் ஆட்சி புரிந்த முதல் மன்னன் என்ற பெருமை எல்லாளன் என்ற தமிழ் மன்னனுக்கு உரியது. இவனைத் துட்டகாமினி என்ற சிங்கள மன்னன் கி.மு. 101இல் வெற்றி கொண்டு அநுராதபுர அரசைக் கைப்பற்றினான். இதன் மூலம் துட்டகாமினி இலங்கை வரலாற்றில் தலைசிறந்த விடுதலை வீரனாகப் போற்றப்படுகிறான். ஆயினும் எல்லாள மன்னனின் நீண்டகால ஆட்சிக்கு அவனது நடுநிலையான ஆட்சியும், அனைத்து மக்களின் ஆதரவுமே முக்கிய காரணம் என்பதை உணர்ந்த துட்டகாமினி எல்லாளனைக் கௌரவப்படுத்த விரும்பினான்.

இதற்காக எல்லாளனுக்கு ஈமக் கிரியைகளை நடத்துவதற்கு நகரத்தில் பறை சாற்றுவித்து, நகரத்தைச் சுற்றி வாழ்ந்த மக்களை வருவித்தான். எல்லாளன் வீழ்ந்த இடத்தில் உடலைத் தகனம் செய்து, அவ்விடத்தில் ஒரு நினைவுச் சின்னத்தை அமைத்தான். அதனை மக்கள் வழிபட வேண்டும் எனப் பணித்து அதன் அருகே செல்லும் வாகனங்களின் ஒலியை நிறுத்தப்படவேண்டும் எனக் கட்டளை இட்டான். இதனைச் சிங்கள மக்களும், ஏனையோரும் கடந்த 2000 ஆண்டுகளாக மதித்து வந்துள்ளனர். இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாளனுக்காக அமைக்கப்பட்ட ஈமச் சின்னத்தையும், அதற்காகப் பின்பற்றப்பட்ட ஈமக் கிரியைகளும் சங்க இலக்கியத்தில் வரும் கற்பதுக்கை என்ற நினைவுச் சின்னத்தை நினைவுபடுத்துவதாக உள்ளது. இவ்வாறு இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட ஈமச் சின்னங்களும், நினைவுச் சின்னங்களும் தமிழகத்திலும்,ஈழத்திலும் பிற்காலத்தில் பள்ளிப்படைக் கோவில்களாகவும், சமாதி கோவில்களாகவும் வளர்ந்துள்ளன.


யாழ்ப்பாணத்தில் காணப்படும்
கேணி
ஆவுரஞ்சிக்கல்
மடம்
சுமைதாங்கிக்கல்

தமிழகத்தில் சங்க காலம் தொட்டு இறந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி, மடம், கேணி என்பன பற்றி ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவ் வகையான நினைவுச் சின்னங்கள் ஈழத்தில், அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பண்டு தொட்டு பரவலாக இருந்துள்ளன. அவற்றை உறுதிப்படுத்தும் எச்சங்களை தற்காலத்திலும் யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காணமுடிகிறது. இவை பெரும்பாலும் பண்டைய காலத்தில் மக்கள் வணிகத்திற்காகவும், போக்குவரத்திற்காகவும் ஒன்றுகூடிய முக்கிய மையங்களில் காணப்படுகின்றன.

இச்சின்னங்கள் சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற குடும்பங்களால் ஆண், பெண் இருபாலாருக்கும் இறப்பின் நினைவாக எழுப்பப் பட்டவையாகும். இந்நினைவுச் சின்னங்கள் பலவற்றில் இறந்தவர் பெயருடன் அவற்றை அமைத்துக் கொடுத்தவரின் பெயர், பரம்பரை, சமயம், சமூக அந்தஸ்து என்பனவும் எழுதப்பட்டுள்ளன. சில இடங்களில் உள்ள ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி என்பவற்றிற்கு இறந்தவரின் நினைவு நாளில் சமயச் சடங்குகள், கிரியைகள் செய்யப்படும் முறை காணப்படுகின்றது. சில இடங்களில் ஆவுரஞ்சிக்கல்லை சிவலிங்கமாகக் கருதி அவற்றை வைத்து சிவாலயங்களும் கட்டப்பட்டுள்ளன. இதற்கு பண்டைய காலம் தொட்டு ஆவுரஞ்சிக்கல்லை மக்கள் தெய்வமாக வழிபட்டு வந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காரணமாக இருக்கலாம். சமகாலத்தில் ஆவுரஞ்சிக்கல், சுமைதாங்கி என்பவற்றை அமைக்கும் மரபு தமிகத்திலோ அல்லது ஈழத்திலோ காணப்படவில்லை. அதற்கு மாறாக இறந்தவர் நினைவாக பஸ்தரிப்பு நிலையங்களை அமைத்தல், இறந்தவர் நினைவாக கல்வெட்டு (நினைவுமலர்) வெளியிடுதல் முதலான பண்பாடு காணப்படுகின்றன. தற்காலத்தில் இறந்தவர் நினைவாக வெளியிடப்படும் நினைவு மலரை நூல் என அழைக்காது கல்வெட்டென அழைப்பது பழைய மரபு மறக்கப்படவில்லை என்பதைக் காட்டுகிறது.

இன்று இலங்கைத் தமிழரிடையே பின்பற்றப்படும் மரணக்கிரியைகள், அபரக்கிரியகைள் என்பவற்றின் சடங்குகள், வாய்க்கரிசி போடும் மரபு என்பவற்றை ஆராய்ந்தால் அவற்றின் தொடக்கம் இறந்தவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து தொடங்குவதை அடையாளம் காணமுடிகிறது. நெடுந்தீவு, இரணைதீவு போன்ற இடங்களில் இறந்தவர்களை மரணமடைந்துவிட்டார் எனக் கூறுவதற்குப் பதிலாக பானையில் தூங்குகிறார், உறியில் தூங்குகிறார் எனக் கூறும் மரபு காணப்படுகின்றது. இது தாழி அடக்கமுறை பற்றிய பண்டைய வரலாற்று நினைவு தமிழ் மக்களிடையே முற்றாக மறையவில்லை என்பதைக் காட்டுகிறது.

இன்று சலவைத்துணிகள், மாடுகள் என்பவற்றில் தமிழ் அல்லது ஆங்கில எழுத்துக்களுடன் சில குறியீடுகளும் இடப்படுகின்றன. இக்குறியீடுகளை ஆதாரமாகக் கொண்டே அவற்றின் உரிமையாளரின் இடம், பெயர், சமயம், சமூகம் என்பன அடையாளம் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் இலங்கைத் தமிழரிடையே இறந்தவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து எழுத்துத் தோன்றியதன் பின்னரும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் ஒரு தனித்துவமான மரபாகும். ஆகவே இறந்தவர்களுக்கு அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களும், அவற்றோடு தோன்றிய இக்குறியீடுகளும் இலங்கைத் தமிழரின் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றை அடையாளப்படுத்தும் குறியீடுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிற் கடவை-02

தோற்றுவாய் :

கோவில்களில் நிறைந்துள்ளதொரு நிலப்பரப்பு என்னுங் குறியீட்டளவில் கோவிற் கடவை என முன்பு ஒரு பகுதி அழைக்கப்பட்டதென வரலாறு குறிப்பிடுகின்றது. அது கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேயன்துறை என்னுங் கிராமங்களை அடக்கியதாக இருந்ததென்றுந் தெரிகிறது. அன்று திருத்தம்பலேஸ்வரம் என்றழைக்கப்பட்ட கீரிமலைப் பகுதியை வந்தடைந்த விஜயன் திருத்தம்பலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரி, கதிரையாண்டவர் கோவில்களைப் புனர் நிர்மாணஞ் செய்து இலங்கையின் கிழக்கு, மேற்கு, தெற்கு என்னுந் திசைகளிலும் சிவாலயங்களைத் தாபித்த வேளையிற்றான் இந்தக் கோவிற்கடவை என்னும் பெயர்ப்பதிவு இடம் பெற்றிருக்க வேண்டுமென்று நினைக்க வேண்டியுள்ளது.

சிவாலயங்கள் நிறைந்த பிரதேசம், சிவ வழிபாட்டிற்கு வாய்ப்பான பிரதேசம் என்னுங் கருத்துப் பொதிவுடன் தான் அப்பெயர் வழக்குப் புழக்கத்திற்கு வந்திருக்கலாம். "கோவில் தோன்றிய காரணத்தாற் கோவிற்கடவை என்னும் பெயரைப் பெற்றது. கீரிமலை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம் ஆகிய மூன்று இடங்களையும் உள்ளடக்கிய பகுதி கோவிற்கடவை என்று வழங்கப்படுவதை இன்றுங் காணலாம். இந்த மூன்று இடங்களின் சரித்திரமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இருப்பவையாம்." என்று திருக்கேதீஸ்வரம் 1976 ஜீலை நான்கு, கும்பாபிஷேக மலரில் முத்து என்பவர் எழுதியுள்ள நகுலேஸ்வரம் என்னுங் கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளது. (பக்கம் 19). 1949 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாய குல சபாநாதன் பதிப்பாகி யாழ்ப்பாண வைபவ மாலை பக்கம் **6-7** இலும் இச்செய்தி காணப்படுகின்றது.

குறிப்பிட்ட இந்த நிலப்பரப்பு விஜயன் வருகைக்கு முன் திருத்தம்பலேஸ்வரம் என்றுதான் அழைக்கப்பட்டிருக்கிறது. வீணாகானபுரமென்று அழைக்கப்பட்து இதற்கும் முந்திய காலத்தாகலாம். அதாவது, இராமாயண காலத்தின் இறுதியை அண்டிய காலமாகலாம். நகுலமுனிவரது கீரிமுகம் சுபாவமுக மாகிய காலத்திருந்துதான் கீரிமலை என்னும் உபயோகம் வழக்கிற்கு வந்திருக்க வேண்டும். மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் சுபாவ முகமாகிய வேளையிலிருந்து தான் மாவிட்டபுரம் என்னும் பெயர் உதயமாயிருக்க வேண்டும். மாவிட்டபுரத்தில் ஒரு முருகன் ஆலயத்தை ஸ்தாபிக்க வேண்டி முருகன் திருவுருக்களைத் தருவிக்க அவை வந்திறங்கிய துறை காங்கேயன்துறை என்றாயினதாகலாம்.

ஆலயங்கள் :

கோவிற்கடவை என்று அன்று குறிப்பிடப்பட்ட பகுதி ஒரு சிறப்பான பகுதியென்று தான் சொல்ல வேண்டும். அங்கு நிர்மாணம் பெற்ற ஆலயங்கள் பலவும் தெய்வீகப் பரிமளிப்பு வாய்ந்தவை. திருத்தம்பலேஸ்வரர் என்றழைக்கப்பட்ட நகுலேஸ்வரர், பல அற்புதச் செயல்களுக்குக் காரணராய அற்புதமூர்த்தி. மாவைக்கந்தன், குதிரை முகத்தை நீக்கிக் குன்ம வியாதியைப் போக்கியருளியவர். மலைப்பகுதியுறை கண்ணன், அசையாது நின்ற கப்பலை நகர்த்தியவர். கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர், இளவாலை ஆனைவிழுந்தான் ஆலயம் இரண்டும் மாருதப்பூரவீகவல்லியின் அமைப்புக்கள் என்பது வரலாறு. இன்னும் ஆங்காங்குள்ள ஆலயச் சிறப்புக்கள் பலப்பல மக்கள் வாய் மொழி மூலமாகக் கேட்டறிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்பரம்பல் :

ஆலயங்களுடனான கடமைக்கு, திருத்தொண்டுக்கு உரியவர்களான மக்கட் பரப்பையும் இந்தக் கோவிற்கடவைப் பிரதேசத்திலே நிறைவாகக் காணமுடியும். கோவிற்கடவையின் வடக்கெல்லை கடலாக அமைந்துவிட்டது. கிழக்கு காங்கேசன்துறை யாழ்நகர் வீதியைக் கொள்ளலாம். முருகனாலயத்திற்கு வடக்கில் கிழக்கு நோக்கி இருநூறு மீற்றர் வரை சென்று குமார கோயிலையும் உள்ளடக்கி இன்னும் கிழக்காகி மாவை முருகன் ஆலயத்தின் கிழக்கெல்லையாகி தெற்கு நோக்கி வீணிய வரை அம்மன் கோயில் வரை செல்லும் பின்பு தென்புறந்திரும்பி மாப்பாண தெரு, பட்டிக்கடவை, வீரகத்தி விநாயகர் ஆலயப்பகுதி என்பவற்றை உள்ளாடக்கி விழிசிட்டி, இளவாலையின் வடக்குப்புறம், மயிலங்கூடல், நாத அலை, கருகம்பனை என்பவற்றுடனாகிக் கோவிற்கடவை அமையும். போயிட்டி, மாங்கொல்லை, வல்லிகிணற்றடி, தச்சன்தோப்பு, கூவில் என்னும் பகுதிகளெல்லாம் இதற்குள் உள்ளடக்கம்.

இந்தச் சுற்றுவட்டத்துள் அந்தணர், மாவை முருகன் தென்புறச் சூழலிலும் கீரிமலை சிவன் ஆலயச் சூழலிலும் உள்ளனர். வீரசைவர்கள் கீரிமலையின் வடபாலிலும், பொற்கலந்தம்பை, நாதஅலை என்னுமிடங்களிலுமுளர். இசை வேளாளர் மாவிட்டபுரச் சுற்றாடலில் நிறைவாக உள்ளனர். கோயிலுக்கு வெள்ளை கட்டுதல் முதலிய கருமங்களில் ஈடுபடுபவர்கள் மாவை முருகனாலயத்திற்குத் தென் மேற்கிலுள்ளனர். பூஜைத் திரவியங்களை வழங்கும் பொன்மனச் செல்வர்கள் கோவிற்கடவை முழுமையிலும் பரம்பலாக உள்ளனர். பண்ணிசைபாடும் ஓதுவார்கள் விழிசிட்டியைச் சாரடந்தவர்களாக இருந்துள்ளனர். யாம் அறிந்தவரை கடந்த நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் திரு. சே. சிவசுப்பிரமணியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. இ. நமசிவாயம், பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, திரு. ஆறுப்பிள்ளை முதலானோர் தொடர்புள்ளவர்களாய் இருந்துள்ளனர்.

சிறப்பான இடப்பெயர்கள் :
காங்கேயன்சீமா, வீணியவரை, மாப்பாணர்தெரு, பட்டிக்கடவை, காயாத்துறை, செம்பொன்வாய்க்கால், சங்கொல்லை, வல்லால்புரை, மயிலப்பை மயிலங்கூடல், மயிலாடு கொக்கன், மயிலாடுதுறை ஆணைவிழுந்தான், குமாரத்திபள்ளம், வல்லிகிணற்றடி என்பனவாய பெயர்களைச் சிந்தனைத் தூய்மையுடனாகித் தெளிய முயற்சிப்பது நல்லது.

சுரங்கப்பாதை :
கீரிமலைச் சிவன் கோயிலுக்குத் தென்கிழக்குப் புறமாக ஒருபாரிய கிடங்கு உண்டு. கிடங்கின் அடித்தளத்திலிருந்து ஒரு பனை, ஒரு கொன்றை என்பன பெரிதாக வளர்ந்துள்ளன. மற்றும் பல்வேறு செடிகளும் வளர்ந்து காடாகிவிட்டது. என் மாணவப் பருவத்தில் இறங்கிப் பார்த்துள்ளேன். ஒரு சுரங்கப்பாதை வடக்குத் தெற்காகச் சென்று கொண்டிருந்தது. விடுப்பூக்கங் காரணமாக இரண்டொரு அடி உள்ளே நகர்ந்தோம். ஒரே இருட்டு, பயம் காரணமாக எமது போக்கை மாற்றிக் கொண்டோம். வெளவால்கள் இருப்பது போன்ற மணம் இருந்தது. அதனால் வெளவாற்புரை என்றும் பெயர் வழக்குண்டு.

இது தொண்டமனாறு செல்லச்சந்நிதி வரை சென்றுவரக்கூடிய பாதை என்றும், மாருதப்புரவீகவல்லி கீரிமலைக்கு வந்து தரிசிப்பதற்கான பாதை என்றுஞ் சொல்வர். அகழ்வராய்ச் சியாளர்க்கு நல்லதொரு விருந்து இது எனலாம்.

நன்றி
பண்டிதர் சி. அப்புத்துரையின்
"நகுலேஸ்வரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

(இப்பாடல் பட்டினத்தடிகளார் தன் தாயரின் மரணச்சடங்கில் பாடப்பெற்றதாகும்.)

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள்சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டிய தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றிய
தாய்தனக்கோ மெய்யிலே தீமூட்டு வேன்

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் உருசியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனே திரவியமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு

முன்னை இட்ட தீ முப்புறத்திலே
பின்னை இட்ட தீ தென்இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்கமூள்கவே

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்

வீட்டிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச் செய்த

# 1. சிவபுராணம்

திருப்பெருந்துறையில் அருளியது

(சிவனது அநாதி முறைமையான பழமை)

கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவாநெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந்தேன்.

*நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள்வாழ்க!*
*இமைப்பொழுதும் என் நெஞ்சில், நீங்காதான் தாள்வாழ்க!*
*கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!*
*ஆகமம் ஆகிநின்று, அண்ணிப்பான் தாள்வாழ்க!*
*ஏகன் அநேகன், இறைவன் அடிவாழ்க!*

*வேகம் கெடுத்தாண்ட, வேந்தன் அடிவெல்க!*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன், பெய்கழல்கள் வெல்க!*
*புறத்தார்க்குச் சேயோன்தன், பூங்கழல்கள் வெல்க!*
*கரங்குவிவார் உள்மகிழும், கோன்கழல்கள் வெல்க!*
*சிரங்குவிவார் ஓங்குவிக்கும், சீரோன் கழல்வெல்க!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அடிபோற்றி, எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி, சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் யடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும், மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை, நம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம், அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள், நின்ற அதனால்
அவன் அருளாலே, அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும், ஓய உரைப்பன்யான்

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து, மிக்காய், விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன், புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி, முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும், பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள், கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள், ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா, விடைப்பாகா வேதங்கள்

ஐயா எனஓங்கி, ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய், இயமாளா ம்விமலா
பொய்யாயின எல்லாம், போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி, மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானந் இல்லாதேன், இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை, அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம், அளவிறுதி, இல்லாய், அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய், அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய், சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய, நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு, நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள், தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும், எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான், வல்வினையேன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய, மாய இருளை
அறம்பாவம் என்னும், அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும், புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது, வாயில் குடிலை
மலங்கப் புலனைந்தும், வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்தஅன்பாகிக், கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத, சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி, நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க், கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த, தயாவான தத்துவனே
மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார், அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப், பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து, நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற, பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே, அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து, ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும், இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே, யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே, தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்உணர்வே
போக்கும் வரவும், புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம்காவலனே, காண்பரிய பேர்ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே, அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச், சொல்லாத நுண்உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின், வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார், அமுதே உடையானே
வேற்று விகார, விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா, அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து, பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து, வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக், கட்டழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம், பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே, தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி, அறுப்பானே ஓ என்று
சொல்லற் கரியானைச், சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின், பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின், உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருப்பொற்சுண்ணம்

முத்துநற் றாமம் பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபம் நற் றீபம் வைமின்
சக்தியுமஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார் பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம்மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணமிடித்துநாமே.

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணமிடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ர்அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புற(ம்) நிலாமே
குனிமின் தொழுமினெங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணமிடித்துநாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரமாளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணமிடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறிந்துநின்று

பாடிப் பொற்சுண்ணமிடித்துநாமே.
அறுகெடுப்பா ராயனும்மரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுது தேவர்கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோஞ்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து
பொற்சுண்ணமிடிந்தும்நாமே.

சூடகந் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை யன்னகோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

வாட்டங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணமிடித்தும்நாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு வென்னும் உலக்கை நாட்டி
மெய்யனு மஞ்சள் நிறைய அட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணமிடித்தும்நாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினமாடஆடச்
சித்தஞ் சிவனொடுமாடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடுமாடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற்சுண்ணமிடித்தும்நாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை யையர்பி நானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணமிடித்தும்நாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமுதெங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனெம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணமிடித்தும்நாமே.

சங்கமரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந்துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணமிடித்தும்நாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற்ற டங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்தும்நாமே.

ஆவகை நாமும் வந்தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும்நாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேன்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச்சுண்ணமிடித்தும்நாமே.

அயன்தலை கொண்டுசெண்டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக்காலாலுதைத்தல்பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயைந்தன முப்புரமெய்தல் பாடி
ஏழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணமிடித்தும்நாமே.

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணமிடித்தும்நாமே.

வேதமும் வேள்வியுமா யினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையுமாயினார்க்குச்
சோதியு மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாயின்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற்சுண்ணமிடித்தும்நாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை மருந்துகள் சில

1. வல்லாரை இலைகளுடன் மிளகு சேர்த்து காலை மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டால் மூலம் குணமாகும்.

2. வேப்பிலையை மண்சட்டியில் போட்டு வாயை மூடி எரித்து சாம்பலை தேனுடன் கலந்து சாப்பிட்டால் வயிற்றுப் புண் நீங்கும்.

3. அன்னாசிப்பழத்தை தேன்தோய்த்துகுறைந்தது நாற்பதுநாட்கள் மதிய உணவுடன் சாப்பிட்டு வர உடல் பலமடையும்.

4. நீரிழிவு நோய் உள்ளவர்கள் 100 கிராம் எள்ளுப் புண்ணாக்கு, முருங்கைக்கீரை இரண்டையும் உலர்த்திப் பொடி செய்து தினமும் இரண்டு கிராம் அளவு மூன்று நேரமும் சாப்பிட்டு வர நோய் குணமடையும்.

5. நொச்சி இலையை காயவைத்து இடித்து தூளாக்கி நீருடன் கலந்து குடிநீராகக் குடிக்க இருமல், காசம் நீங்கும். இதனை தண்ணீரில் போட்டு கொதித்த ஆவியைப் பிடிக்க உடல்வலி, தலைவலி நீங்கும்.

6. கரிசலாங்கண்ணி இலையை அரைத்து பசுப்பால் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டால் மஞ்சள் காமாலை பறந்திடும்.

7. கீரை சமைக்கும்பொழுது நெய்விட்டு சமைத்தால் உடல் நலம்பெறும்.

8. இஞ்சியை இடித்துசாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டால் மூக்கடைப்பு, தும்மல் ஆகியவை நீங்கும்.

9. அறுகம்புல்லை தேங்காய் எண்ணையில் காய்ச்சி தொழுநோய் புண்களுக்கு போட தோல்காயம் நீங்கும்.

10. ஊறுகாய் தயாரிக்கும்பொழுது சிறிது ஓமம் சேர்த்தால் சுவையும் பெருகி நீண்ட நாள் பழுதடையாதிருக்கும்.

11. இளநீருடன் சிறிது தேன் சேர்த்து வெறும் வயிற்றில் தினமும் குடித்து வந்தால்சலம் சம்பந்தமான நோய்கள் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

- காசிப்பிள்ளை + எள்ளுப்பிள்ளை
  - பொன்னுப்பிள்ளை
  - சுப்பிரமணியம்
  - தங்கம்
  - தையல்பிள்ளை
  - சங்கரப்பிள்ளை
  - சின்னத்துரை
  - தெய்வானைப்பிள்ளை
  - செல்லம்மா
  - பரமகுரு
  - கந்தசாமி
- நன்னித்தம்பி + பொன்னுப்பிள்ளை
  - சோமசுந்தரம்
  - வேலுப்பிள்ளை
  - சங்கரப்பிள்ளை

தையல்பிள்ளை — சோமசுந்தரம்

- சேனாதிராசா + பவானி
  - கலைஅமுதன்
  - ஆராஅமுதன்
  - தாரகா
- செல்வரெத்தினம் + விஜயகுமாரி
  - கௌசல்யா + பிரதீப்குமார் } காருண்யா
  - விஜிர்தா
- இராசரத்தினம்
- தங்கராசா + இன்பதேவி
  - சிவஜனனி
  - பகீரதி (பிரதா)
  - பிரியா
- செல்வமணி + சிவகுமார்
  - திருமாவளவன்
  - கமலமோகன் + கவிதா } அபிநயா
  - அமுதினி
  - மயூரன்
- செல்வராணி + யோகீஸ்வரன்
  - அருள்விழி
  - இளமாறன்
- இராஜேஸ்வரி + ஜெயரத்தினம்
  - பிரசாந்தி
  - ரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

ஆச்சி எம்மை விட்டுப் பிரிந்து விட்டார் எனும் செய்தி 18/03/2016 அதிகாலையில் பரவி விட்டது. அவ்வேளை முதல் இன்று வரை நேரிலும், பத்திரிகைகளிலும், இணையத்தளங்கள், முகநூல் துண்டுப்பிரசுரங்கள் முதலான சாதனங்களில் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கு எம் குடும்பம் நன்றியைத் தெரிவித்து நிற்கிறது.


குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, தமிழர் தலைவர் சம்பந்தன், வடக்கு மாநில ஆளுநர் றெஜினல்ட் கூறே, முதலமைச்சர் நீதியரசர் விக்கினேஸ்வரன், மேலாக ஆச்சியின் உடலைத் தரிசிக்க வீடுவந்து பிரார்த்தித்த யாழ்.ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், ஆயர். ஜெபநேசன் அவர் களுக்கும், இந்தியத் துணைத்தூதுவர் நடராஜன், இந்தியத் தலைவர் நெடுமாறன், வெளியுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர, நிதி அமைச்சர் ரவி கருணநாயக்கா முதலானோர்க்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், கட்சிகளின் தலைவர்கள் தொண்டர்கள், அன்பர்கள் அனைவருக்கும் மீண்டும் இதயமார்ந்த நன்றிகள்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org